1990 மே 1

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நிரந்தரமாக விசேட போலீஸ் பிரிவு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நிரந்தரமாக விசேட காவல் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

மதுரை காமராசர் பல்கலைக் கழக அஞ்சல் வழி கல்வித்துறை நிர்வாகச் சீர்திருத்தம்

*7567 திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழி கல்வித்துறை நிர்வாகச் சீர்திருத்தம் சம்பந்தமாக திரு. பழனி வேல்ராசன் குழு அளித்துள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை, காமராசர் பல்கலைக் கழகம் ஏற்கெனவே அது குறித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால் அஞ்சல் வழிக் கல்வி சம்பந்தமாக பல்வேறு குறைபாடுகள் நடந்ததாகவும் ஏற்கெனவே புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இது சம்பந்தமாக, திரு. பழனிவேல்ராசன் குழு ஆய்வு நடத்தியதா ? அது அளித்த பரிந்துரைகள் என்ன என்பதைத் தெரிவிக்க இயலுமா எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பழனிவேல்ராசன் அவர்களுடைய தலைமையில் அமைந்த குழு, அஞ்சல் வழிக் கல்வித் துறையில் நிர்வாகச் சீர்திருத்தம் குறித்து ஆராய்ந்தது. அந்த நிர்வாக

சீர்திருத்தம் என்பது, ஏற்கெனவே உள்ள குறைபாடுகளை, வீண் செலவுகளைத் தவிர்ப்பதற்காக என்ற முறையிலே அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் துறையில் செலவினத்தைக் குறைக்கும் முகமாக, 31 ஆசிரியப் பணியாளர்கள் பல்கலைக் கழகத்தின் முழு நேரத் துறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அஞ்சல் வழிக் கல்விக்கு, துணை இயக்கு நர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பாடத் துணை இயக் குநருக்கு உதவும் வகையில் பாடக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பயிற்சிக் கட்டணம், ''செலுத்தும் சீட்டின்'' வாயிலாக, 'சலான்' வாயிலாக செலுத்துவதற்குப் பதிலாக, ''டிமாண்ட் டிராப்ட்' மூலமாகப் பதிவு செய்யப்படுகிற முறை ஏற்கப்பட்டது. 1990 ஆவது ஆண்டிலே இருந்து அஞ்சல் வழிக் கல்வித்துறை மாண வர்களின் சேர்க்கைகள் கணிப்பொறி மூலமாகப் பதிவு செய்யப் பட்டு வருகிறது. அச்சடிக்கப்பட்ட பாடங்களை வைப்பதற்காக சிமெண்டாலான அலமாரிகள் செய்யப்பட்டுள்ளன. பல்கலைக் கழகத்தின் மாலை நேரக்கல்லூரிக்கு அஞ்சல் வழிக் கல்வித்துறை யின் பணியாளர்களிலிருந்து ஒரு முழு நேர, முறையான இயக்கு நர் நியமிக்கப்பட்டுள்ளார். 61 மலேசிய நாட்டின் மாணவர்கள் அவர்களின் தகுதிகளின் அடிப்படையில் பி.ஏ., பட்ட வகுப்பு களில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து இன்னும் சில பணிகள் நிறைவேற்றப்படும்.

9-05 மணி.

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, இந்த அஞ்சல் வழிக் கல்விச் சம்பந்தமாக பல முறைகேடுகள் நடந் திருப்பதாக மதுரை, காமராசர் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் பல புகார்களை அரசுக்குத் தெரிவித்ததாக நான் அறிகிறேன். அப்படிப்பட்ட புகார்கள் ஏதேனும் வந்தனவா? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நேரடியாகப் பதில் சொல்வதற்கான விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், பல்கலைக் கழகத்தைப் பற்றி எந்தக் குறை பாடு, குற்றச்சாட்டு வந்தாலும், பல்கலைக் கழகத் துணை வேந் தருக்கு அனுப்பப்படும். அமைச்சருக்குக் கிடைத்தாலும் கூட, துணை வேந்தருக்குத்தான் அனுப்ப முடியும். துணை வேந்தர் அங்கே உள்ள ஆட்சிக் குழு மூலமாக உரிய ஆய்வுகளை நடத்து துவார்.